# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 420/25 — 1986 සැප්තැම්බර් 26 වැනි සිකුරාදා — 1986.09.26

420/25 ஆம் இலக்கம் — 1986 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. உ—பி. 21/78 II

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 (1) ஆம் பிரிவின்கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி அமைச்சர் யூனியஸ் ரிச்சார்ட் ஜயவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், 1980, மே 21 ஆம் திகதி 111/5 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை 1986 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 01 ஆம் நாளிலிருந்து இக்கட்டளை மூலம் நீக்குகின்றேன்.

ஜே. ஆர். ஜயவர்த்தன,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு, 1986.09.25.

10—258/1

---

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டம்

21 ஆம் பிரிவின்கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி அமைச்சர் யூனியஸ் ரிச்சார்ட் ஜயவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையோடு இக்கட்டளை மூலம், 1986 அக்டோபர் மாதம் 01 ஆம் நாளிலிருந்து—

(i) விஞ்ஞானம், விவசாயம், வர்த்தகமும் முகாமைத்துவமும், கலாசாரக் கற்கைகள் ஆகிய கல்விப் பிரிவுகளில் உயர் கல்விக்கு ஏற்பாடுசெய்து அதை மேம்படுத்தி வளர்க்கும் நோக்கத்துக்கென பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபிக்கின்றேன்; இப் பல்கலைக்கழகம் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டதான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்;

(ii) இப்பல்கலைக்கழகத்திற்கு "கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை" என்னும் பெயர் மகுடத்தைக் குறித்தொதுக்குகின்றேன்;

(iii) இப்பல்கலைக்கழகத்தின் அமைவிட நிலையம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மட்டக்களப்பாக இருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன்;

(iv) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு விஞ்ஞானம், விவசாயம், வர்த்தகமும் முகாமைத்துவமும், கலாசாரக் கற்கைகள் ஆகிய துறைகளைக் குறித்தொதுக்குகின்றேன்; அத்துடன்

(v) கீழே தரப்பட்டுள்ள நிரை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் கீழே தரப்பட்டுள்ள நிரை II இல் அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள கற்கைப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் எனக் குறித்துரைக்கின்றேன் —

| நிரை I | | நிரை II |
|---|---|---|
| விஞ்ஞானத்துறை | ... | தாவரவியல் பகுதி<br>இரசாயனவியல் பகுதி<br>கணிதவியல் பகுதி<br>விலங்கியல் பகுதி<br>புவியியல் பகுதி<br>பௌதிகவியல் பகுதி |
| விவசாயத்துறை | ... | பயிராக்கவியல் பகுதி<br>விவசாயப் பொருளியல் பகுதி<br>விலங்கின விஞ்ஞானப் பகுதி |
| வர்த்தக, முகாமைத்துவத்துறை | ... | வர்த்தகப் பகுதி<br>பொருளியல் பகுதி<br>முகாமைத்துவப் பகுதி |
| கலாசாரக் கற்கைத்துறை | ... | அராபியக் கல்விப் பகுதி<br>இஸ்லாமியக் கற்கைப் பகுதி<br>நுண்கலைக் கல்விப் பகுதி |

ஜே. ஆர். ஜயவர்த்தன,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு, 1986.09.25.

10–258/2

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.